**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்.**

முன்னிலை - திரு. M. சண்முகவேல்ராஜ், B.A., B.L., L.L.M.,

சார்பு நீதிபதி, இராஜபாளையம்.

2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29 ம் நாள் திங்கள்கிழமை

**O.S. No.338/2024**
**( CNR – TNVR230001972024)**

-------------

இராஜபாளையம் டவுண், I.N.T.U.C. நகர், கதவு எண்.11/1 என்ற முகவரியில் குடியிருந்து வரும் லேட்.ஜெகநாதராஜா அவர்கள் குமாரத்தி, இந்து, சுமார் 40 வயதுள்ள S.J.பிரியா …..வாதி

**//எதிர்//**

1) இராஜபாளையம் தாலுகா, புதுப்பாளையம் கிராமம், தெற்கு வெங்காநல்லூர் பஞ்சாயத்து, E.S.I.காலணி, கதவு எண்.326 என்ற முகவரியில் குடியிருந்து வரும் கிருஷ்ணமராஜா அவர்கள் குமாரர், இந்து, சுமார் 58 வயதுள்ள M.K.ராஜலிங்கராஜா

2) விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் டவுண், புதுப்பாளையம், திருவனந்தபுரம் தெரு, கதவு எண்.309 என்ற முகவரியில் குடியிருந்து வரும் சக்திநாராயணன் அவர்கள் குமாரர், இந்து, சுமார் 42 வயதுள்ள ராமச்சந்திரன் …..பிரதிவாதிகள்

2nd defendant impleaded as per order in I.A.No.1/2022, dated.28.02.2022
Amended as per order inI.A.No.01/2022, dated.20.10.2022

கடந்த 25.10.2023 தேதியிட்ட விற்பனைப் பத்திரத்தை, சட்டப்படி செல்லுபடியாகாதது, செயல்படுத்த இயலாதது, செல்லாதது மற்றும் வாதிக்குக் கட்டுப்படாதது எனக் கூறி ரத்து செய்யக் கோரியும், வழக்கு விவரப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் வாதிக்கு முழுமையான உரிமையுடையவை என்று அறிவிப்பதோடு, அச்சொத்துக்களை வாதி அமைதியாக அனுபவிப்பதில் தலையிடுவதிலிருந்து பிரதிவாதிகள், அவர்களது ஆட்கள் மற்றும் முகவர்களைத் தடுத்து நிரந்தரத் தடை உத்தரவு பிறப்பிக்க கோரியும், (அல்லது) வழக்கு விவரப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் வாதிக்குச் சொந்தமானவை என்று அறிவித்து, அச்சொத்துக்களைக் காலி நிலையில் வாதியிடம் ஒப்படைக்குமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவு பிறப்பிக்க கோரியும், இந்த வழக்கின் செலவு தொகையை வாதிக்கு, பிரதிவாதிகள் செலுத்த உத்தரவிடகோரியும், மற்றும் இதர பரிகாரங்களை

வழங்கியும், தீர்ப்பும் மற்றும் தீர்ப்பாணையும் பிறப்பிக்க கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>தாவா தொகை விபரம்</u>**

| | | |
|---|---|---|
| 25.10.2013 தேதியிட்ட விற்பனைப் பத்திரத்தை ரத்து செய்வதற்கான நிவாரணம் கோரும் வழக்கின் மதிப்பு | - | ரூ.4,67,305.00/- |
| நீதிமன்ற கட்டணம் | - | ரூ.14019.30/-(தமிழ்நாடு நீதிமன்ற கட்டண சட்டம் பிரிவு 40 ன் படி செலுத்தப்பட்டுள்ளது) |
| விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கான வழக்கின் மதிப்பு (நிலவரித் தொகையின் 30 மடங்கு: 2.82 x 30) = ரூ. | - | ரூ.84.60/- |
| குறைந்தபட்ச மதிப்பு | - | ரூ.5000.00/- |
| நீதிமன்ற கட்டணம் | - | ரூ.150.00/-(தமிழ்நாடு நீதிமன்ற கட்டண சட்டம் பிரிவு 25(b)ன் படி செலுத்தப்பட்டுள்ளது) |
| அனுபவத்தினை பெறுவதற்கான மாற்று நிவாரணத்தைக் கோரும் வழக்கின் மதிப்பு (நிலவரித் தொகையின் 30 மடங்கு: 2.82 x 30) = ரூ. | - | ரூ.84.60/- |
| குறைந்தபட்ச மதிப்பு | - | ரூ.5000.00/- |
| நீதிமன்ற கட்டணம் | - | ரூ.150.00/-(தமிழ்நாடு நீதிமன்ற கட்டண சட்டம் பிரிவு 25(b)ன் படி செலுத்தப்பட்டுள்ளது) |
| வழக்கு சொத்தின் மொத்த மதிப்பு | - | ரூ.4,72,305.00/- |

**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

| | | |
|---|---|---|
| மொத்த நீதிமன்ற கட்டணம் | - | ரூ.14,169.30/- |
| வழக்குமூலம் | - | 18.10.2004, 25.10.2013, 02.01.2016, 03.04.2017 ஆகிய தேதிகளில் நீதிமன்ற வரம்பிற்குட்பட்ட பகுதியில் வைத்து உற்பத்தி. |
| வழக்கு தாக்கல் நாள் | - | 07.04.2017, 24.04.2017 |
| வழக்கு கோப்பிற்கு எடுத்த நாள் | - | 26.04.2017 |

இந்த வழக்கானது திருவில்லிபுத்தூர் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.145/2017 ஆக கடந்த 26.04.2017 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு வழக்கு விசாரணை நிலுவையில் இருந்து வந்த நிலையில், திருவில்லிப்புத்தூர் கூடுதல் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, பின்னர் அதிகார வரம்பிற்குட்பட்டு இந்த வழக்கானது இராஜபாளையம் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.338/2024 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு 26.03.2026 ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.செல்வம் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.சுவாதீஸ்ரவரன் அவர்கள் முன்னிலையாகியும், 2 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.E.ராஜலட்சுமி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வாதியின் சீர்திருத்த வழக்குரை, பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை மற்றும் வழக்கு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ..

## தீர்ப்பாணை

1) வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

2) செலவு தொகை இல்லை.
(இரு தரப்பிலும் செலவு தொகை பட்டியல் தாக்கல் இல்லை)

**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

**<u>சொத்து விபரம்</u>**

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் பதிவு வட்டம், இராஜபாளையம் சார்பதிவாளர் சரகம், இராஜபாளையம் வட்டம், புதுப்பாளையம் கிராமம், 982 நம்பர் பட்டாவில் கண்ட அயன் புஞ்சை சர்வே எண்.234/1 ல் ஹெக்டேர் 0.92.5 க்கு ஏக்கர் 2 செண்டு 28 ல் மேல் பக்கம் பிரிவினையின்றி பாதி ஹெக்டேர் 0.46.0 க்கு ஏக்கர் 1 செண்டு 47 ல் உள்ள புஞ்சை நிலத்திற்கு நான்கு மால்

| | | |
|---|---|---|
| வடக்கே | - | பிரியா புஞ்சை நிலம் |
| தெற்கே | - | S.R.ஜெகநாதராஜா புஞ்சை நிலம் |
| கிழக்கே | - | சொக்கத்தாய் வகையறா புஞ்சை நிலம் |
| மேற்கே | - | சீனிவாசராஜா, வெங்கடேஷ்ராஜா புஞ்சை நிலம் |

இதற்குள்பட்ட புஞ்சை நிலம் ஏக்கர் 1 செண்டு 14 ம் தபசில் சரி

**<u>2 வது தபசில்</u>**

மேற்படி கிராமம், சர்வே எண்.235/2 ல் ஹெக்டேர் 0.48.5 க்கு ஏக்கர் 1 செண்ட் 20 ம் தபசில் சரி.

மேற்படி சொத்து தெற்கு வெங்காநல்லூர் கிராம பஞ்சாயத்திற்குள்பட்டதும், இராஜபாளையம் பஞ்சாயத்து யூனியனை சேர்ந்ததாகும்.

2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 29 நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

SHUNMUGAVEL RAJ
Digitally signed by SHUNMUGAVEL RAJ

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்